1972 ஆகஸ்ட் 19]

Payment of Pension to all Municipal Employees

*81. Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have ordered payment of pension to all municipal employees who retired prior to October 1970; and

(b) if so, the details thereof?

நகராட்சிப் பணியாளர் அனைவருக்கும் ஓய்வூதியம்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970 அக்டோபர் திங்களுக்கு முன்பு பணியிலிருந்து ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர் அனைவருக்கும் ஓய்வூதியம் கொடுக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) நகராட்சி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஒன்று அண்மையில் 14–1–1970 முதற்கொண்டு செயலுக்கு கொண்டுவரப் பட்டது. அந்நாளில் 90 ரூபாயும், அதற்கு மேலும் குறைந்த சம்பள விகிதம் பெற்றுவந்த நகராட்சி ஊழியர்கள் இத்திட்டத் தின்படி ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராவார்கள். இத்துடன் 14–1–1970 தேதியில் 90 ரூபாய்க்கும் குறைவாக குறைந்த சம்பள விகிதமுள்ளவர்களும் 14-1-1970-லிருந்து 1-10-1970-க்கு இடைப்பட்ட காலத்தில் ஓய்வுபெற்றவர்களுமான நகராட்சி ஊழியர்கள் ஒவ் வொருவருக்கும். அவர்கள் கடைசியாக வாங்கிய, அடுத்த ரூபாய்க்கு முழுமையாக்கப்பட்ட சம்பளத்தில் 25 சதவீத அளவு ஒருமொத்த ஓய்வூதியமாக வழங்க வகைசெய்யும் புறப்பணித் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது மேலும், 14–1–1970 தேதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற நகராட்சி ஊழியர்கள் அனைவருக்கும். நகராட்சி நிதியிலிருந்து ஒருமொத்த ஓய்வூதியம் வழங்குவது குறித்த ஆலோசனையும் பரிசீலனையில் உள்ளது.